Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 476/2022 Date:16.07.2026
Deposition of witness for prosecution: PW 1 ( LW1)
Defence:
Court:

| Name | செந்தில்குமார் | Village | கும்பகோணம் |
|---|---|---|---|
| Father/ Husband Name | ராமன் | Taluk | கும்பகோணம் |
| Age | 47 /2026 | Calling | தனியார் நிறுவனம் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 16.07.2026. TIME 01.10 **PM**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை :–**

நான் தற்போது கும்பகோணத்தில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். சுமார் 7 வருடங்களுக்கு முன்பாக விபத்தினால் காயம்பட்ட எனது அப்பா ராமன் என்பவரை ஆம்புலன்சில் ஏற்றிய போது போலிசார் என்னிடம் கையொப்பம் கேட்டார்கள், கையொப்பம் செய்தேன். புகாரில் உள்ள விபரம் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.1** ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**சாட்சி பிறழ்சாட்சியாக அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 25.05.2019–ம் தேதி மதியம் எனது அப்பா எங்களது தோட்டத்திற்கு செல்வதற்காக TN 60 W 1991 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் கம்பம்– கூடலூர் மெயின்ரோட்டில் நடராஜ திருமண மண்டபம் அருகே யானைகுழாய் அருகே சென்றுகொண்டிருந்த போது, KL 45 Q 6299 என்ற பதிவெண் கொண்ட கார் அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஓட்டி எனது அப்பாமீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்று கம்பம் மெட்டு காலனியை சேர்ந்த திருமால் மகன் கிருஷ்ணன் என்பவர் தகவலின் அடிப்படையில் விபத்து குறித்து, புகார் அளித்தேன் என்றும், புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd. P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.